Due to G' section

-23-

## சுருக்கம்

கைத்தறித் தொழில் – நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்– கைத்தறி நெசவாளர்கள் மரணமடையும்போது ஈமச்சடங்கு செலவுக்கென ரூ.2,000/- மானியத் தொகையாக வழங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (டி2) துறை

அரசாணை (நிலை) எண்.67 நாள்: 24.06.2009

(ஆனி 10 திருவள்ளுவர் ஆண்டு 2040)

படிக்கப்பட்டது:

1. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கடிதம் ந.க.எண்.16568/2008/ஜி1 நாள் 17.06.2008
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கடிதம் ந.க.எண்.94839/2008/எஸ்.எப்.4 நாள் 27.11.2008

---

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 07.05.2008 அன்று நடைபெற்ற கைத்தறித் துறைக்கான மானியக் கோரிக்கையின்போது "நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்கள் மரணமடையும்போது, அவர்களின் ஈமச்சடங்கு செலவுக்கென ரூ.2,000/- மானியத் தொகையாக வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

2) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தமது கடிதத்தில், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள உறுப்பினர்கள் எவரேனும் மரணமடைய நேரிட்டால், அன்னாரது ஈமச்சடங்கு செலவுக்காக சங்கங்களிலுள்ள பொதுநல நிதியிலிருந்து (Common Good Fund) ரூ.2,000/- வழங்குவதற்கும், அத்தகைய செலவினம் ரூ.10,000/-க்கு மிகும்பட்சத்தில், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மேற்காண் நிதி உதவியை வழங்கிவிட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பின்னேற்பு அனுமதி பெறவும், பொதுநல நிதி (Common Good Fund) இல்லாதபட்சத்தில், சங்கத்தின் பொது நிதியிலிருந்து (General Fund) மேற்படி தொகையை வழங்க, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அறிவுரைகள் வழங்க உரிய அனுமதி வழங்குமாறும், இந்த நிதி உதவியை 01.06.2008 முதல் வழங்க அனுமதிக்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3) கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலித்து, நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்கள் எவரேனும் மரணமடைய நேரிட்டால், அன்னாரது ஈமச்சடங்கு செலவுக்காக சங்க பொதுநல நிதியிலிருந்து (Common Good Fund) ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வழங்குவதற்கும், இந்த நிதியுதவியை 01.06.2008 முதல் நடைமுறைப்படுத்தவும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது. மேலும், அத்தகைய செலவினம் ரூ.10,000/-க்கு மிகும்பட்சத்தில், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மேற்காணும் நிதி உதவியை வழங்கிவிட்டு, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பின்னேற்பு அனுமதி பெறவும், அவ்வாறு பொது நல நிதி (Common Good Fund) இல்லையெனில், சங்கத்தின் துணை விதிகளில் (Bye Laws) தக்க வழிவகை மேற்கொண்டு, சங்கத்தின் பொது நிதியிலிருந்து (General Fund) இச்செலவினத்தை மேற்கொள்ளவும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அறிவுரைகள் வழங்குவதற்கும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4) இவ்வரசாணை அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.34692/தொழில்/2009 நாள் 22.06.2009-ன்படி நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். ராஜகோபால்,
முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை –108
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை – 5
மாநிலத் தலைமை கணக்காயர் (தணிக்கை) சென்னை–18
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9
நிதித் (தொழில்கள்) துறை, சென்னை – 9
இ.கோ./ உதிரி நகல்கள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்